# மறைமலைநகர்

# நகராட்சி

# நிர்வாக அறிக்கை

# 2023–2024

# <u>மறைமலைநகர் நகராட்சி</u>

# <u>நிர்வாக அறிக்கை</u>

# 2023-2024

## <u>தோற்றமும் எல்லையும் :</u>

மறைமலைநகர் நகராட்சி சென்னைக்கு செல்லும் நுழைவாயில் அருகில் உள்ள சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சி பகுதிகளில் கால்நடை ஆராய்ச்சி நிறுவன பண்ணையும் அதிகளவில் தொழிற்சாலைகள் நிறைந்ததாகவும் உள்ளது. இந்நகராட்சி பகுதியில் அதிகளவில் ஏரிகளும், குளங்களும் இருப்பதினால் குடிநீர் தட்டுப்பாடு இல்லாத நகராட்சியாகும்.மேலும் இந்நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து சாலைகளுக்கும் சங்க தமிழ் வளர்த்த தமிழ் புலவர்களின் பெயர்கள் வைக்கப்பட்டு தமிழுக்கு பெருமை படுத்திய நகராட்சியாகும். இந்நகராட்சி எல்லை வல்லாஞ்சேரி, பொத்தேரி, நின்னக்கரை, காட்டாங்குளத்தூர், கோனாதி, தைலாவரம், பேரமனூர், கீழக்கரணை, சித்தமனூர், செங்குன்றம், கடம்பூர், களிவந்தப்பட்டு, திருக்கச்சூர், கூடலூர், சட்டமங்கலம், பணங்கோட்டூர் ஆகிய 16 வருவாய் கிராமங்களை உள்ளடங்கியதாகும்.இந்நகராட்சியின் மொத்தப் பரப்பளவு 58.08 ச.கி.மீட்டர் ஆகும்.

அரசு ஆணை எண்.586 ஊரக வளர்ச்சித் துறை நாள்.25.07.85–ன்படி நகரியமாக அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வந்தது. அரசு ஆணை எண்.145 நாள்.31.05.94–ன்படி சிறப்பு நிலை பேரூராட்சியாக அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வந்தது.அரசு ஆணை (ப) எண்.301, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.24.08.2004–ன்படி மூன்றாம்நிலை நகராட்சி எனப் பெயர் மாற்றம் செய்து ஆணையிடப்பட்டு, நிர்வாகம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு 07.10.2004 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக இயங்கி வந்தது.அரசு ஆணை எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.09.08.2010–ன்படி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1991–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி இந்நகராட்சி மக்கட் தொகை எண்ணிக்கை 33640 ஆகும். 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி இந்நகராட்சி மக்கட் தொகை 48463 ஆகும். 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கின்படி இந்நகராட்சி மக்கட் தொகை 81361 இதில் 41772 ஆண்கள் மற்றும் 39589 பெண்கள் ஆகும்.தற்போதைய மக்கள் தொகை 97687 ஆகும். ஆண்கள் 48626 பெண்கள் 49061.

அரசு ஆணை (நிலை) எண்.189 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை நாள்.20.08.1996–ன்படி தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கும் பெண்களுக்கும் கீழ்கண்டவாறு வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகராட்சியில் அமைந்துள்ள வார்டுகளின் மொத்த எண்ணிக்கை 21 ஆகும்.

## நகர மன்ற பதவிக் காலம்

அறிக்கை ஆண்டில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.146 நாள்.24.10.2016–ன்படி தனி அலுவலராக பணிபுரிந்த ஆணையாளர்களின் விவரம்.

| பெயர் | முதல் | வரை |
|---|---|---|
| திருமதி.என்.விமலா | 24.10.2016 | 31.06.2017 |
| திரு,சி.விஜயகுமார் | 01.07.2017 | 10.01.2018 |
| திரு.பி.எம்.என்.முஜிபுர் ரகுமான் | 11.01.2018 | 08.03.2019 |
| திருமதி.வா.விஜயகுமாரி | 09.03.2019 | 16.02.2021 |
| திரு.வே.நவேந்திரன் | 18.02.2021 | 12.07.2021 |
| திரு.ஒ.ராஜராம் | 12.07.2021 | 22.11.2021 |
| திருமதி.சா.லெட்சுமி | 22.11.2021 | 31.03.2021 |

1. <u>அறிக்கை ஆண்டில் பணிபுரிந்த ஆணையாளர்கள் மற்றும் பணியாளர்கள்</u>.

| பெயர் | முதல் | வரை |
|---|---|---|
| திருமதி.சா.லெட்சுமி | 01.04.2023 | 21.04.2023 |
| திரு.த.சௌந்தரராஜன் | 21.04.2023 | 15.03.2024 |
| திரு.ஆர்.செல்வராஜ் நகராட்சி பொறியாளர் (ஆணையாளர் பொறுப்பு) | 15.03.2024 | 18.03.2024 |
| திருமதி.ஷா.ஷகிலா | 18.03.2024 | 31.03.2024 |

| பெயர் | பதவி | முதல் | வரை |
|---|---|---|---|
| திரு.சி.வெங்கடேசன் | நகராட்சி பொறியாளர் | 01.04.2023 | 25.05.2023 |
| திரு.ஆர். செல்வராஜ் | நகராட்சி பொறியாளர் | 25.05.2023 | 31.03.2024 |

| | | | |
|---|---|---|---|
| திருமதி.டி.உஷாராணி | இளநிலை பொறியாளர் | 01.04.2023 | 31,08,2023 |
| திருமதி.ஆர்.கௌரி | இளநிலை பொறியாளர் | 01.09.2023 | 31.03.2024 |
| திரு.கு.சந்துரு | மேலாளர் (பொறுப்பு) | 01.04.2023 | 07.05.2023 |
| திரு.நா.நந்தகுமார் | மேலாளர் | 08.05.2023 | 23.08.2023 |
| திரு.கு.சந்துரு | மேலாளர் (பொறுப்பு) | 24.08.2023 | 06.10.2023 |
| திரு.ச.சின்னக்குட்டி | மேலாளர் (பொறுப்பு) | 07.10.2023 | 14.11.2023 |
| திருமதி.வே.விஜயாஸ்ரீ | மேலாளர் (பொறுப்பு) | 15.11.2023 | 31.03.2024 |
| திரு.எம்.வெங்கடேசன் | நகர திட்டமிடுவபர் | 01.04.2023 | 31.03.2024 |
| திரு.கே.சங்கர் | நகரமைப்பு ஆய்வாளர் | 01.04.2023 | 31.03.2024 |
| திருமதி.வே.விஜயாஸ்ரீ | வருவாய் அலுவலர் | 01.11.2023 | 01.04.2024 |
| திரு.ஆர்.சிவமுருகன் | துப்புரவு ஆய்வாளர் | 01.04.2023 | 31.03.2024 |
| திரு.கே.சந்துரு | வருவாய் ஆய்வாளர் (பொ) | 01.04.2023 | 30.08.2023 |
| திரு.ச.சின்னக்குட்டி | வருவாய் ஆய்வாளர் (பொ) | 31.08.2023 | 24.10.2023 |
| திரு.பெ.சங்கர் | வருவாய் ஆய்வாளர் | 25.10.2023 | 31.03.2024 |
| திரு. இரா. கணேசஷ் முருகன் | வருவாய் ஆய்வாளர் | 25.10.2023 | 31.03.2024 |

<u>பணியமைப்பு</u>

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை அரசாணை (நிலை) எண்.10 நாள்.23.01.2023ன்படி பணியமைப்பு நகராட்சி நிர்வாகம் நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப பணியிடங்களுக்கான வரையறை நிர்ணயம் செய்து அதற்கேற்ப புதிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் ஏற்கெனவே உள்ள பணியிடங்களை முறைப்படுத்துதல் கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

| நகராட்சிகளின் நிலைகளுக்கேற்ப ஒரே சீரான பணியிடங்கள் தோற்றுவித்து முறைப்படுத்துவதற்கான வரையறைகள் (Norms) நிர்ணயம்செய்தல் | | | |
|---|---|---|---|
| சிறப்பு நிலை நகராட்சிகள் | | | |
| வ.எண் | | பதவியின் பெயர் | பணியிடங்களின் எண்ணிக்கை |
| 1 | பொதுப்பிரிவு | மேலாளர் (வகுப்பு –1) | 1 |
| 2 | | வருவாய் அலுவலர் (வகுப்பு –1A) | 1 |
| 3 | | கணக்கர் (வகுப்பு–1A) | 1 |
| 4 | | வருவாய் ஆய்வளாார் (வகுப்புV) | 2 |

| | | | |
|---|---|---|---|
| 5 | | உதவியாளர் | 5 |
| 6 | | இளநிலை உதவியாளர் | 10 |
| 7 | | தட்டச்சர் | 4 |
| 8 | | சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 |
| 9 | | வருவாய் உதவியாளர் | 12 |
| 10 | | பதிவறை எழுத்தர் | 1 |
| 11 | | அலுவலக உதவியாளர் | 4 |
| 1 | பொறியியல் பிரிவு | நகராட்சி பொறியாளர் / செயற்பொறியாளர் | 1 |
| 2 | | உதவி பொறியாளர் / இளநிலை உதவியாளர் | 3 |
| 3 | | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 3 |
| 4 | | படவரைவாளர் நிலை –III | 1 |
| 5 | | பணி ஆய்வாளர் | 5 |
| 6 | | மின் கண்காணிப்பாளர் நிலை –1 | 1 |
| 7 | | மின்பணியாளர் நிலை 1 | 1 |
| 8 | | குழாய் பொருத்துனர் நிலை 1 | 1 |
| 1 | நகரமைப்புப் பிரிவு | முதுநிலை நகரமைப்பு அலுவலர் / செயற்பொறியாளர் திட்டம் | 1 |
| 2 | | நகரமைப்பு ஆய்வாளர் | 3 |
| 1 | பொது சுகாதாரப்பிரிவு | நகர் நல அலுவலர் | 1 |
| 2 | | துப்புரவு அலுவலர் | 1 |
| 3 | | துப்புரவு ஆய்வாளர் | 6 |
| 4 | | துப்புரப்பணி மேற்பார்வையாளர் | 10 |
| 5 | | களப்பணி உதவியாளர் | 1 |
| 1 | கணினிப் பிரிவு | கணினி உதவி திட்ட அமைப்பாளர் | 1 |
| | | மொத்தம் | 82 |

| | பெயர் | கட்சி |
|---|---|---|
| நகரமன்றதலைவர் | திரு.ஜெ.சண்முகம் | திமுக |
| நகர மன்ற துணைதலைவர் | திருமதி.சித்ரா கமலக்கண்ணன் | திமுக |

| வார்டு எண். | நகரமன்ற உறுப்பினர் பெயர்கள் | கட்சி |
|---|---|---|
| 1 | திருமதி.பெ.சுஜாதா | இஜக |
| 2 | திரு.தி.யுவராஜ் | அதிமுக |
| 3 | திருமதி.வெ.பரிமளா | அதிமுக |
| 4 | திரு.ர.கிரிச்சந்திரன் | திமுக |
| 5 | திருமதி. கு.ரேணுகா | திமுக |
| 6 | திருமதி.தேவிகோகுலகிருஷ்ணன் | தேமுதிக |

| | | |
|---|---|---|
| 7 | திருமதி.காயத்திரி சரவணன் | தேமுதிக |
| 8 | திருமதி.டி.கஸ்தூரிதசரதன் | அதிமுக |
| 9 | திரு.ரெ.சு.மனோகரன் | சுயேட்சை |
| 10 | திரு.எம்.ஜி.கே.கோபிகண்ணன் | அதிமுக |
| 13 | திரு.செ.ஆல்பர்ட் | திமுக |
| 14 | திரு.செ.பெருமாள் | திமுக |
| 15 | திருமதி.நி.விஜயலட்சுமி | திமுக |
| 16 | திருமதி.சு.சுசீலா | திமுக |
| 17 | திரு.கே.ஆர்.விஜயகுமார் | சுயேட்சை |
| 18 | திருமதி.த.கோமளவள்ளி | திமுக |
| 19 | திருமதி.ர.ஜெயந்தி | அதிமுக |
| 20 | திரு.து.மூர்த்தி | திமுக |
| 21 | திரு.ஜெ.சுரேஷ்குமார் | திமுக |

1. வரிவிதிப்பு மேல்முறையீட்டு குழு உறுப்பினருக்கான தேர்தல்

1. திரு செ.ஆல்பர்ட் – 13 வது வார்டு உறுப்பினர்
2. திருமதி தேவி கோகுலகிருஷ்ணன் – 6வது வார்டு உறுப்பினர்
3. திரு ஆர்.எஸ்.மனோகரன் – 9வது வார்டு உறுப்பினர்
4. திருமதி கு.ரேணுகா – 5வது வார்டு உறுப்பினர்

1. <u>ஒப்பந்த குழு உறுப்பினர்</u>

1. திருமதி.எஸ் சுசீலா – 16வது வார்டு உறுப்பினர்

2. <u>பணி நியமன குழு உறுப்பினர்</u>

1. திரு..து. மூர்த்தி வார்டு எண் – 20 வது வார்டு

மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தின் முதல் கூட்டம் 31.03.3022 அன்று நடத்தப்பட்டு நகரமன்றம் செயல்பட்டு வருகிறது.

## கூட்டங்கள்

இவ்வறிக்கையாண்டில் கீழ்கண்டபடி கூட்டங்கள் நடத்தப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

| வ.எண். | இனங்கள் | கூட்டத்தின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருட்கள் |
|---|---|---|---|
| 1 | சாதாரண கூட்டம் | 4 | 320 |
| 2 | சிறப்பு கூட்டம் | – | – |
| 3 | அவசரக் கூட்டம் | 1 | 1 |

2. பொது பிரிவு

இந்நகராட்சி பொதுப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட 25 நிரந்தர பணியாளர்களில் மூன்று தட்டச்சர்களும், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடம் நீண்ட நாட்களாக காலியாக உள்ளது. மேற்கண்ட பணியாளர்களுக்கு நடப்பாண்டில் 108.93 இலட்சம் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

**புதிய கணக்கு முறை**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒருங்கிணைந்த மின் ஆளுமை (Urban Tree Information System) மூலம் இந்நகராட்சியில் நிர்வாகத்தின் மூலம் செயல்திறன் மிக்க, துல்லியமான, வெளிப்படை தன்மைகளுடன் கூடிய நிதி கணக்கியல் மற்றும் தணிக்கை பணிகள் நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கணினி பிரிவு மின் ஆளுமை**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒருங்கிணைந்த மின் ஆளுமை (Urban Tree Information System) மூலம் இந்நகராட்சியில் நிர்வாகத்தின் மூலம் செயல்திறன் மிக்க, துல்லியமான, வெளிப்படை தன்மைகளுடன் கூடிய பொது மக்களுக்கு நகர்புற உள்ளாட்சி அமைப்பினால் வழங்க வேண்டிய சேவைகளை எளிமையாகவும், மிக விரைவாகவும் வழங்க முடியும். கீழ்கண்டவாறு.

- பிறப்பு மற்றும் இறப்பு பதிவு
- சொத்து வரி
- குடிநீர் விநியோகம்
- தொழில் வரி
- வரியில்லா இனங்கள்
- புதை வடிகால் இணைப்பு
- வர்த்தக உரிமம்
- நிதி கணக்கியல்
- பொது மக்கள் சேவை மையம்
- குடிமக்கள் இணைய முகப்பு
- குறை தீர்வு

- கணினி நிர்வாகம்
- நகரசபை நிகழ்ச்சி நிரல்
- சட்டசபை கேள்விகள் மற்றும் பதில்கள்
- ஒருங்கிணைந்த பணியாளர் மேலாண்மை அமைப்பு
- சட்ட மேலாண்மை
- சொத்து முன்பதிவு சொத்து மேலாண்மை
- தணிக்கை
- கட்டிட உரிமம்
- பணியாளர் சுய சேவை
- மின்னணு அலுவலகம்
- மருத்துவமனை மேலாண்மை
- கொள்முதல்
- பள்ளி மேலாண்மை
- திடக்கழிவு மேலாண்மை
- வாகன மேலாண்மை
- வார்டு வேலை

## சமுதாய பிரிவு

### மகளிர் குழு

மறைமலைநகர் நகராட்சியில் 1 முதல் 21 வார்டுகளில் 432 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றது. 2023–24 –ம் நிதியாண்டில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில் இருந்து 50 புதிய மகளிர் சுய உதவிக் குழுக்கள் துவங்கப்பட்டது.

இந்த நிதியாண்டில் 117 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு வங்கியிலிருந்து ரூ.8.68 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. PMSVANIDHI திட்டத்தின் கீழ் 1020 பயனாளிகளுக்கு முதல் தவணையாக 1,02,00,000/– தொகையும் இரண்டாவது தவணையாக 453 பயனாளிகளுக்கு 90,60,000/– தொகையும் வங்கியிலிருந்து கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது.

### குடிசைப்பகுதி விவரங்கள்

மறைமலைநகர் நகராட்சியில்1 முதல் 21 வார்டுகளில் மொத்தம் 30 குடிசைப்பகுதிகள் உள்ளது. இதில் 7 அறிவிக்கப்பட்ட குடிசைப்பகுதிகளும், 23 அறிவிக்கப்படாத குடிசைப்பகுதிகளும் உள்ளன இந்த 30 குடிசைப்பகுதிகளில் மொத்தம் 18501 மக்கள் வசித்து வருகின்றார்கள். இதில் ஆண்கள் 9829 மற்றும் பெண்கள் 8972 ஆவர்.

# வரவினங்கள் பற்றிய பொது விவரம்

**வருவாய் பிரிவு பணியாளர்கள்**

இந் நகராட்சி வருவாய் பிரிவில் வருவாய் அலுவலர் ஒருவர், இரண்டு வருவாய் ஆய்வாளர்கள், மற்றும் வருவாய் உதவியாளர் 12 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு 11 வருவாய் உதவியாளர்கள் பணிபுரிந்து வந்துள்ளனர். வருவாய் பணியாளர்களுக்கன ஊதியம் மற்றும் இதரபடிகளுக்காக நடப்பு ஆண்டில் 56.55/– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ. 26.64 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**வரி நிலைபாடு**

2023–24–ம் ஆண்டிற்கு சொத்துவரி நடப்பு கேட்புத் தொகை ரூ.4694.47 இலட்சம் மொத்த வரி விதிப்புகள் 24094

2023–24–ம் ஆண்டிற்கு தொழில்வரி நடப்பு கேட்புத் தொகை ரூ.917.85 இலட்சம். மொத்த வரி விதிப்புகள் 9240

| வ.எண் | கட்டிடங்களின் விவரம் | வரி விதிப்பு |
|---|---|---|
| 1 | வீடுகள் | 25653 |
| 2 | தொழிற்சாலைகள் | 1840 |
| 3 | வணிக வளாகங்கள் | 700 |
| 4 | கல்வி நிறுவனங்கள் | 23 |
| | **மொத்தம்** | **28216** |

31.03.2024 முடிவில் கீழ்கண்ட வரியினங்கள் நிலுவை உள்ளது.

1. சொத்துவரி ரூ.1378.07 லட்சம்
2. தொழில்வரி ரூ.256.21 லட்சம்

வரியில்ல இனங்கள் இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய அலுவலக கட்டிடத்தில் இயங்கிவரும் அரசு அலுவலகம் மூலம் வரும் வாடகை, கடை மற்றும் பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடைகள் மூலம் 2023–2024 நிதியாண்டில் நடப்பு கேட்புத் தொகை ரூ.11.78 இலட்சம் வருவாய் ஈட்டப்படுகிறது.

**வரவு செலவு திட்டம்**

நடப்பாண்டில் **8598.44** இலட்சம் வரவாகவும் **6171.24** இலட்சம் செலவாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தணிக்கை தடை விவரம்

இந்நகராட்சியில் 2023–2024–ஆம் ஆண்டு முடிய தணிக்கை நடைபெற்றுள்ளது. இந்நகராட்சியில் மொத்தம் 427 தணிக்கை தடை நிலுவையில் உள்ளது.

## பொது சுகாதாரம்

பொது சுகாதாரம் மறைமலைநகர் நகராட்சி 58.08 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட இன் நகராட்சியானது 2004–ஆம் ஆண்டு நகராட்சியாக உருவானது இந்நகராட்சியில் மொத்தம் 27648 குடியிருப்புகளும் இதன் தற்போது மக்கள் தொகையானது 1.10 லட்சம் இந்நகராட்சி தொழிற்சாலைகள் நிறைந்த நகராட்சியாகும் இங்கு 500–க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றது.

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் துப்புரவு ஆய்வர்1 , துப்புரவு மேற்பார்வையாளர் 1, ஓட்டுநர்கள் 2 மற்றும் துப்புரவு பணியாளர்கள் 65 பணியிடங்கள் அனுமதி அளிக்கப்பட்ட பணியிடங்களாகும். இதில் தற்போது 51 துப்புரவு பணியிடங்கள் காலியாக உள்ளது.மேலும் நடப்பாண்டில் மேற்கண்ட பணியாளர்களுக்கு ரூ.180.23 இலட்சம் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

## துப்புரவு பணி

மறைமலைநகர் நகராட்சி சுமார் 58.08 ச.கி.மீட்டர் பரப்பளவு உள்ளது 200–க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ளன மேலும் பிரதான கல்லூரியான S.R.M உள்ளது. இந்நகராட்சியில் 29 நிரந்தர துப்புரவு ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.ஒரு டிப்பர் லாரி, 2 மினி டிப்பர், காம்பாக்டர் ஒன்று மற்றும் டம்பர் பிளேசர் 31 LCV மற்றும் 14 BOV வாகனங்கள் ஆகியவை துப்புரவுப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

35 கி.மீ. சாலையில் தினசரி துப்புரவு பணியும் 10 கி.மீ. சாலைகளில் இரு நாட்களுக்கு ஒரு முறை துப்புரவு பணியும் 282 கி.மீ. சாலைகளில் வாரம் இரு முறை துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.மேலும் அரசாணை எண்.101–ன்படி இந்நகராட்சிக்கு 349 தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகிறது தற்போது நிரந்தர பணியார்கள் மற்றும் வெளிக்கொணர்வு பணியாளர்கள் 216 நபர்களை கொண்டு பணி செய்யப்பட்டு வருகிறது.

குப்பை தொட்டி இல்லாத நகராட்சியாக அறிவிக்கப்பட்டதால் தினசரி சேகரமாகும் குப்பைகள் தூய்மை பணியாளர்கள் மூலம் மட்கும் குப்பை மற்றும் மட்காத குப்பையாக பிரித்து சேகரம் செய்யபட்டு மட்கும் குப்பை நுண்உர குடிலுக்கும் (MCC) மட்காத குப்பை வளமீட்பு மையத்திற்கும் (RRC) அனுப்பி வைக்கப்படுகிறது.தினசரி நீர் தேக்கமுள்ள பகுதியில் சுண்ணாம்பு பவுடர், பிளிசிங் பவுடர் தெளிக்கப்படுகிறது. மேலும் 21 ஆகிய வார்டுகளில் 187 வெளிக்கெணர்வு பணியாளர்களை தனியார் மூலம் கொண்டு துப்புரவு பணிகள் செய்யப்பட்டு வருகிறது இதற்கான நடப்பாண்டில் ரூ.600.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## கொசு ஒழிப்பு

நகராட்சிப் பகுதியில் தீவிரமாக கொசு ஒழிக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. தினசரி கைத் தெளிப்பான் மூலம் கொசு ஒழிப்பு மருந்து தெளிக்கப்படுகிறது. மேலும் முதிர் கொசுவை அழிக்க தினசரி புகை மருந்து அடிக்கப்படுகிறது. தனியார் மூலமாக 95 வெளிக்கொணர்வு DBC பணியாளர்களை கொண்டு கொசு ஒழிப்பு பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான நடப்பாண்டில் 180.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## குளோரினேஷன்

நகராட்சிப் பகுதி பொது கிணறுகளில் வாரம் ஒரு முறையும், மறைமலைநகர் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, கிராமப் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் தினசரி

அளவுப்படி நகராட்சி குளோரினேஷன் செய்து வருகிறது. தனியார் கிணறுகளில், மாதம் ஒரு முறை குளோரினேஷன் பணி செய்யப்படுகிறது.

## தொழில் உரிமங்கள்

நகராட்சிப் பகுதியில் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகள் சுமார் 668 எண்ணிக்கை உள்ளன. இவைகளுக்கு உரிமம் வழங்குவதன் மூலமாக ரூ.101.37 இலட்சம் உரிமக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

## திடக்கழிவு மேலாண்மை திட்டம்

இதன் மூலம் இங்கு தினசரி 33 டன் திடக்கழிவு உற்பத்தியாகின்றன, இவ்வாறு உற்பத்தியாகும் 33 டன் கழிவுகளில் இருந்து 16.5 டன் மட்கும் கழிவினை நுண்உரம் தயாரிக்கும் பணிக்கும், 4 டன் மறு சுழற்சி பிளாஸ்டிக் கழிவுகளை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்யவும், 10 டன் பயன்பாடற்ற பிளாஸ்டிக் கழிவுகளை அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலைக்கு எரிபொருளாக பயன்படுத்தவும்,பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளை மேற்கொள்ள நிரந்தர பணியாளர்கள் 29 தனியார் தூய்மை பணியாளர்கள் உள்ளனர்.மேலும் திடக்கழிவு சேகரம் செய்ய 31 எண்ணிக்கையிலான LCV வாகனம், 14 பேட்டரி ஆபரேட்டர் வாகனம், 4 டிப்பர்லாரி, 1 காம்பேக்டர், 1 டம்பர் பிளேசர் மற்றும் வாகனம் இப்பணிக்கென பயன்படுத்தப்படுகிறது.

மேலும் மறுசுழற்சி பிளாஸ்டிக் கழிவுகளை தினசரி மற்றும் வாரந்தோறும் புதன் கிழமை அன்று உள்ளூர் சந்தையில் விற்பனை செய்து தொடர்புடைய பணியாளர்களுக்கு விற்பனை செய்த தொகையினை பிரித்து வழங்கப்பட்டு வருகிறது. இப்பணியில் சுமார் 1542டன் அளவுள்ள மக்கும் கழிவுகளை உரமாக்கும் பணிக்கு பயன்படுத்தப்படுள்ளது.மேலும் பயனற்ற பிளாஸ்டிக் கழிவுகளை எரிபொருள் பயன்பாட்டிற்காக 1. அரியலூர் அல்ட்ராடெக் சிமெண்ட் தொழிற்சாலை, ரெட்டிப்பாளையம் 2. வென்சர்ஸ் கெருகம்பாக்கம் என்பவருக்கும் அனுப்பிவைக்கப்படுகிறது, இதன் மூலம் இதுவரை சுமார் 625.77 டன் பயன்பாடற்ற பிளாஸ்டிக் கழிவுகளை இப்பணிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே சித்தமனூர் உரக்கிடங்கில் உள்ள கழிவுகளை அப்புறப்படுத்த பயோமைனிங் முறைப்படி அகற்றப்பட்டுவிட்டது.

மேற்கண்ட பணிகள் மூலம் திடக்கழிவுகளை திறந்த திடலில் கொண்டு போய் கொட்டுவது 80 சதவீதம் குறைந்துள்ளது. மீதமுள்ள 20 சதவீதம் கழிவுகளை கொட்டுவதை தவிர்க்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## கொரோனா தடுப்புநடவடிக்கை

இந்நகராட்சிப் பகுதியில் கொரோனா தொற்று நோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு கிருமி நாசினி தெளித்தல், மாஸ்க்,முழு கவச உரை, மருந்துகள் மற்றும் பணியாளர்களுக்கு முதலுதவி பாதுகாப்பு உபகரணங்கள் வாங்குவது, மேலும் தொற்று உள்ள நபர்கள் உறவினர்கள் மற்றும் அந்த

பகுதியில் உள்ளவர்களுக்கு கொரோனா பரிசோதனை செய்யப்படுகிறது. காய்ச்சல் கண்ட நபர்களின் குடும்பங்களுக்கு மருந்து மற்றும் விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுகிறது. மேற்கண்ட பணிகளை DBC பணியாளர்கள் மற்றும் தன்னார்வ பணியாளர்கள் மூலமாக செய்யப்பட்டு வருகிறது.

<u>நகரமைப்பு பிரிவு</u>

இந்நகராட்சியில் நகரமைப்பு அலுவலர் பணியிடம் 1, நகரமைப்பு ஆய்வர் பணியிடம் 3 உள்ளது. இதில் 2 நகரமைப்பு ஆய்வர் பணியிடம் காலியாக உள்ளது. மேலும் நடப்பாண்டில் மேற்கண்ட பணியாளர்களுக்கு 21.12 இலட்சம் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்கு செலவிடப்பட்டுள்ளது.

<u>மறைமலைநகர் அமைப்பு</u>

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மறைமலைநகர் நகராட்சி குடியருப்புப் பகுதிகளுக்கு உயர் வருவாய் பிரிவு, மத்திய வருவாய் பிரிவு, குறைந்த வருவாய் பிரிவு, பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரிவு என பொதுமக்கள் வசதிக்கு தகுந்தாற்போல் வீடுகளாகவும், காலி மனைகளாகவும் ஒதுக்கீடு செய்து வருகிறது.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சென்னை நகரில் மக்கள் நெருக்கம் தவிர்க்கும் நோக்குடன் புறநகர் ஒன்று புதியதாக உருவாக்கி புதுநகரில் ஒருபுறம் 1.00 இலட்சம் குடும்பங்கள் குடியமர்ந்த இலக்கு நிர்ணயம் செய்து குடியிருப்பு பகுதியாகவும், மறுபுறம் பெரிய அளவில் தொழிற்பேட்டை அமையும் நோக்குடன் சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தூரத்தில் மறைமலைநகர் உருவாக்கப்பட்டது. சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ,வன இலாகாவிற்கு சொந்தமான நிலப்பரப்பிலும், அதை சுற்றியுள்ள நின்னக்கரை, கீழ்கரணை, சித்தமனூர் ஆகிய வருவாய் கிராமங்கள் முழுவதும் காட்டாங்குளத்தூர், திருக்கச்சூர், பேரமனூர், செங்குனறம், பொத்தேரி, கூடலூர், ஆகிய வருவாய் கிராமங்களில் சில பகுதியும் 3300 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்து குடியிருப்பு மனைக்கும், தொழிற்சாலை மனைக்கும் உலக வங்கி உதவியுடன் சாலைகள், பாலாறு குடிநீர், பாதாள சாக்கடை, தெருவிளக்கு, சாக்கடைகள் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி மறைமலைநகர் உருவாக திட்டம் வகுக்கப்பட்டது. இத்திட்டம் ஒவ்வொரு பகுதியாக நிறைவேற்றி இதனை உள்ளாட்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மறைமலைநகர் திட்ட உள்ளடங்கும் வருவாய் கிராமங்களின் ஏழு ஊராட்சிகளை இணைத்து, சிறப்புநிலை நகரியமாக அரசு ஆணை எண்.586 ஊரக வளர்ச்சித் துறை நாள்.25.07.85–ல் அறிவித்தது. 1. காட்டாங்குளத்தூர், 2.நின்னக்கரை, 3.பொத்தேரி, 4. களிவந்தப்பட்டு, 5.பேரமனூர், 6. திருக்கச்சூர், 7. செங்குனறம், ஆகிய காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் அடங்கிய ஏழு ஊராட்சிகளை உள்ளடக்கிய 16 வருவாய் கிராமங்களில் மொத்த பரப்பளவு 58.08 சதுர கிலோ மீட்டர்களாகும். இதில் மறைமலைநகர் (CMDA) திட்டம் 9.4 சதுர கிலோ மீட்டர்களாகும்.(3300 ஏக்கர்).

1. <u>கூடலூர் **Neighbour hood scheme** மனைப்பிரிவு</u>.
   நில அளவு எண்.38(பகுதி)

   MMNT/ MMDA L.O.No.2/89

   திருத்தியது MMNT / MMDA L.O.No.2/89

   இத்திட்டத்தில் HIG, MIG,LIG,குடியிருப்பு மனைகள்CMDA–ஆல்

உருவாக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2. **கூடலூர் Neighbour hood (பகுதி) மனைப்பிரிவு**

(S.No.23(PT) 26 பகுதி, 2 பகுதி, 37பகுதி மற்றும் 39 பகுதி )

மனைப்பிரிவு எண்.MMNT / CMDA L.O.No.3/2004

திருத்தியதுMMNT / CMDA L.O.No.1/2003

இத்திட்ட மனைப்பிரிவில் HIG, MIG,LIG, என மொத்தம் 303 குடியிருப்பு மனைகள் CMDA–ஆல் உருவாக்கப்பட்டு ஒதுக்கீடுதாரர்களுக்கு தொடர்களுக்கு பத்திர பதிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

3. **இரயில் நகர் நின்னக்கரை கிராமம்**(நில அளவு எண்.358,359)

Neighbour hood scheme –III.

MMNT / CMDA L.O.No.

திருத்தியதுMMNT / CMDA L.O.No.

இத்திட்டத்தில் மொத்தம் 338 குடியிருப்புகள் CMDA–ஆல் உருவாக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு பத்திரம் பதிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

4. **காட்டாங்குளத்தூர் NH பகுதி மனைப்பிரிவு**

MMNT / CMDA L.O.No.8/20000

திருத்தியது MMNT / CMDA L.O.No.3/2000

இத்திட்டத்தில் MIG,LIG-I,LIG-II, என பிரிவுகள் ஏற்படுத்தி மொத்தம் 1000 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டவர்களுக்கு பத்திரம் பதிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுஅபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

5. **இரயில்நகர் கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கம்** (61, நின்னக்கரை கிராமம்)

இத்திட்டம் 250 மனைகள் இரயில்வே பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கும்,50 மனைகள் அரசு ஊழியர்களுக்கும் மற்றும் 50 மனைகள் பொது மக்களுக்கும் மனைப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

6. **தமிழ்நாடு நகர்புற வளர்ச்சி திட்டம் (site & services programme)**

(திருக்கச்சூர்விரிவு அபிவிருத்தி திட்டம்)

LP(S&S) / MMDA No.12/93

திருத்தியது LP(S&S) / MMDA No.9/92

இத்திட்டத்தில் HIG 41 மனைகள் ,MIG 114 மனைகள்,LIG-I 335 மனைகள்,

LIG-II 235 ,EWSB 489 மனைகள்,EWSA 298 மனைகள் ஆக 1512 மனைகள் ஏற்படுத்தப்பட்டு பளனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

7. <u>நின்னக்கரை (Neighbour hood scheme)</u>

MMNT/CMDA L.O.No 1/2004 ( NTI / 011424/04)

இத்திட்டத்தில் 197 மனைகள் குடியிருப்பு மனைகள் ஏற்படுத்தப்பட்டு பயனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

<u>தொழிற்பேட்டை:</u>

நகராட்சி எல்லைக்குள் 564 சிறிய மற்றும் பெரிய தொழிற்கூட்டங்கள் இயங்கி வருகின்றன. வருவாய் கிராமங்கள் மற்றும் குடியிருப்புகள் விவரம்.

வருவாய் கிரரமங்கள் 16

1. வல்லாஞ்சேரி
2. பொத்தேரி
3. நின்னக்கரை
4. காட்டாங்குளத்தூர்
5. கோனாதி
6. தைலாவரம்
7. பேரமனூர்
8. கீழ்க்கரணை
9. சித்தமனூர்
10. செங்குன்றம்
11. கடம்பூர்
12. களிவந்தப்பட்டு
13. திருக்கச்சூர்
14. கூடலூர்
15. சட்டமங்கலம்
16. பனங்கோட்டூர்

<u>ஆக்கிரமிப்புகள்</u>

இந்நகராட்சி எல்லைக்குள் அத்துமீறிய ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை.அத்துமீறிய ஆக்கிரமிப்புகள் பார்வையிட்டு கண்டுபிடிக்கப்பட்டு உடனுக்குடன் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

<u>பூங்கா</u>

மறைமலைநகர் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஒப்படைத்த 18 பொது இடங்களில் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டு, நடைபாதை, சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், மின்விளக்குகள்,

மற்றும் அழகிய செடிகள் வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் மறைமலைநகர் நகராட்சி உள்ள அனைத்து வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளில் 371 பூங்காக்களில் 52 எண்ணிக்கையிலான பூங்காக்களில் சுற்றுச் சுவர் மின் விளக்கு மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அமைக்கப்பட்டு அழகிய பூச்செடிகளுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>பொறியியல் மற்றும் குடிநீர் பிரிவு</u>

இந்நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் பிரிவிற்கு 23 பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

1. செயற் பொறியாளர் – 1
2. இளநிலை பொறியாளர் – 3
3. பொது பணி மேற்பார்வையாளர் – 3
4. படவரைவாளர் நிலை –III –1
5. பணி ஆய்வர் – 5
6. மின் கண்காணிப்பாளர் நிலை –1 – 1
7. மின் பணியாளர் நிலை –1 –1
8. குழாய் பொருத்துனர் நிலை–1 – 1

மேற்கண்ட பணியிடங்களில் 10 பணியிடங்கள் காலியாக உள்ளது.நடப்பாண்டில்.94.79 இலட்சம் ஊதியம் மற்றும் இதர செலவினங்களுக்காக செலவிடப்பட்டுள்ளது.

<u>சாலைகள்</u>

இந்நகராட்சி நிர்வாகத்தின் கீழ் உள்ள சாலைகளின் மொத்த நீளம் 325.708 கிலோ மீட்டர்கள் ஆகும். கீழ்கண்ட விவரப்படி பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. தார்சாலைகள் 135.57 கி.மீ
2. சிமெண்ட் சாலைகள் 162.00 கி.மீ
3. பேவர் பகைச் சாலைகள் 1.43 கி.மீ
4. மண் சாலைகள் 26.71 கி.மீ

<u>சாலைப்பணிகள்</u>

2022–23ஆம் ஆண்டு 15வது மத்திய நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் 3.010 கிலோ மீட்டருக்கு 9 தார் சாலை பணிகள் ரூ.119.00 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

2022–23ஆம் ஆண்டு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 4.583 கிலோ மீட்டருக்கு 8 தார் சாலை பணிகள் ரூ.146.10 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

2022–23ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 9.538 கிலோ மீட்டருக்கு 47 தார் சாலை பணிகள் ரூ.658.60 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

2023–24ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 29.096 கிலோ மீட்டருக்கு 73 தார் சாலை பணிகள் ரூ.1161.10 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

## சிறுபாலங்கள்

அறிக்கைஆண்டில் அனைத்து வார்டு பகுதிகளிலும் சிறுபாலங்கள் மற்றும் வடிகால்வாய்கள் ரூ.127.50 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

## மழைநீர் கால்வாய்

நகராட்சியில் 142.82 கி.மீ நிளத்திற்கு மழைநீர் கால்வாய் பராமரிக்கப்பட்டு வருகிறது.இந்நிதியாண்டில் புதியதாக ரூ.236.18 லட்சம் செலவில் மழைநீர் கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளது.

## தெருவிளக்கு

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கீழ்கண்ட விவரப்படி தெருமின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| 1. | 20WLED விளக்குகள் | 2291 |
| 2. | 40WLED விளக்குகள் | 101 |
| 3. | சோடியம் விளக்குகள் | 29 |
| 4. | 70WLED விளக்குகள் | 2788 |
| 5. | எல்.இ.டி விளக்குகள் | 3662 |
| 6. | 90WLED விளக்குகள் | 665 |
| | மொத்தம் | 9536 |

## குடிநீர் வசதி

நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்களுக்கு கீழ்கண்ட விவரப்படி குடிநிர் வசதி ஏற்படுத்தப்படுள்ளது.

1. பொதுக்கிணறுகள்
   நகர்ப்பகுதி – 95 எண்ணிக்கை
2. கைப்பம்புகள்
   இந்திய மார்க் 2 கைபம்பு – 572 எண்ணிக்கை
   பவர் பம்ப் – 202 எண்ணிக்கை
   குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் – 156 எண்ணிக்கை
3. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி
   1. 72 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பராமரிக்கப்பட்டு வருகிறது.
   2. அறிக்கை ஆண்டில் இரண்டு லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 5 தரைமட்ட நீர்தேக்க தொட்டிகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.
4. பொது குழாய்கள்
   நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ளூர் நீர் ஆதாரங்கள் (Local Source) மூலம் 3636 பொது குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மறைமலைநகர் குடிநீர்த் திட்டம்

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மறைமலைநகர் குடிநீர் திட்டம், கல்பாக்கம் அருகே ஆயப்பாக்கத்தில் பாலாறு படுகையில் குடிநீர் எடுத்து வழங்க திட்டம் அமைத்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் 31.03.2023வரை மொத்தமுள்ள குடிநீர் குழாய் இணைப்புகளின் எண்ணிக்கை 10365 ஆகும்.

<u>செயல்பாடு</u>

மறைமலைநகரிலிருந்து 43 கி.மீ தொலைவில் உள்ள ஆயப்பாக்கம் என்ற இடத்தில் பாலாற்றங்கரையில் 7 ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து. இவற்றின் மூலம் பெறப்படும் தண்ணீர் அங்குள்ள 3.30 லட்சம் லிட்டர்கள் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் சேகரிக்கப்பட்டு நீருந்து நிலையத்தில் உள்ள 70 பரிதிறன் கொண்ட இரண்டு மோட்டார்கள் மூலம் ஆயப்பாக்கத்திலிருந்து 5 கி.மீ தொலைவில் உள்ள நெரும்பூர் என்ற இடத்தில் அமைந்துள்ள 6.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு பம்பிங் செய்து சேகரிக்கப்படுகிறது.

நெரும்பூர் நீருந்து நிலையத்தின் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலுள்ள தண்ணீர் இந்த நிலையத்தில் உள்ள 4 எண்ணிக்கை 125 பரிதிறன் மோட்டார்கள் மூலம் நெரும்பூரிலிருந்து 18 கி.மீ. தொலைவிலுள்ள கீரப்பாக்கம் நீருற்று நிலையை 3.30 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு பம்பிங் செய்யப்படுகிறது.

கீரப்பாக்கம் நீருந்து நிலையத்தில் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியிலுள்ள தண்ணீர் இந்த நிலையத்தில் உள்ள 3 எண்ணிக்கை 150 பரிதிறன் மின்மோட்டார்கள் மூலம் 20 கி.மீ தொலைவிலுள்ள மறைமலைநகர் நீரேற்று நிலையை 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிக்கு பம்பிங் செய்து, இதிலிருந்து மறைமலைநகரிலுள்ள 9.00 லட்சம் லிட்டர், 6.00 லட்சம் லிட்டர் மற்றும் 2.00 லட்சம் லிட்டர்கள் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு ஏற்றப்பட்டு நகரில் இணையம் 1,2,3 காந்திநகர் பகுதி மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளுக்கு நகராட்சி மூலம் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சியில் மொத்தமுள்ள 21 வார்டுகளில் 6 வார்டு பகுதிகளுக்கு மட்டும் பாலாறு கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தினசரி 25.00 இலட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. ஏனைய 15 வார்டு பகுதிகளுக்கு உள்ளூர் நீராதாரங்கள் மூலம் திறந்த பொது கிணறு மற்றும் ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் உறிஞ்சப்பட்டு மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் மூலம் குளோரினேஷன் செய்யப்பட்டு குடிநீர் விநியோகம் தினசரி 122 LPCDஎன்ற அளவில் தங்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

<u>நந்திவரம் கூடுவாஞ்சேரி கூட்டு குடிநீர் திட்டம்</u>

1997–98–ல் நிறைவு பெற்ற நந்திவரம் கூடுவாஞ்சேரி பாலாறு குடிநீர் திட்டம் நகராட்சியில் கீழ்கண்ட பகுதியில் புதியதாக மேல்நிலை நீத்தேக்க தொட்டிகள் அமைத்து பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்கப்பட திட்டம் நடைமுறைப்படுத்தி வருகிறது.

1. திருக்கச்சூர் – 30000 லிட்டர்
2. நின்னக்கரை கிராமம் – 30000 லிட்டர்
3. பொத்தேரி – 30000 லிட்டர்
4. பேரமனூர் – 30000 லிட்டர்

5. தைலாவரம் காலனி – 30000 லிட்டர்
6. தைலாவரம் கிராமம் – 10000 லிட்டர்
7. பனங்கோட்டூர் கிராமம் – 10000 லிட்டர்
8. பனங்கோட்டூர் காலனி – 10000 லிட்டர்

நந்திவரம் கூடுவாஞ்சேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் கீழ் பத்து கிராமப்புற பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

நகராட்சிக்குச் சொந்தமான 1 குடிநீர் டாங்கர் லாரி (6000 லிட்டர் கொள்ளளவு 1 எண்ணம்) மூலம் தினமும் பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மறைமலைநகர் நகராட்சி வார்டு எண்.3 டவுன் சென்டர் பகுதியில் எம்.ஜி.ஆர் சாலை சர்வீஸ் சாலை அருகில் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டிலும் வார்டு எண்.11 பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து நிலைய பகுதியில் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு அம்மா உணவகங்கள் கட்டப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. இதற்கான ஆண்டு வரவு ரூ.21.60 இலட்சம், செலவு ரூ.60.53 இலட்சம்.

4.பாதாளசாக்கடைத் திட்டம்

மறைமலைநகர் பகுதி மற்றும் டவுன் சென்டர் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், மேம்படுத்தப்பட்ட மனைப்பிரிவுகளில் கழிவுநீர் அகற்ற தெருக்களில் குழாய் அமைத்து பாதாள சாக்கடைத் திட்டம் உருவாக்கி நகராட்சி பராமரிப்புக்கு ஒப்படைத்துள்ளது. மொத்தம் 21 வார்டுகளில் 6 வார்டுகளில் மட்டும் 6 வார்டுகள் வார்டு எண்.8ல்(பகுதி), 9,11,12,13,15 மற்றும் 17 (பகுதி) மட்டும் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறையில் உள்ளது. இதில் அனைத்து வீடுகளும், தொழிற்சாலைகளும் கழிவுநீர் இணைப்பு பெற்றுள்ளது. இக்கழிவு நீர் பாதாள சாக்கடைத் திட்டக் குழாய் அமைப்பின் நீளம் 68கி.மீ. ஆகும்.

செயல்பாடு

மறைமலைநகர் சிட்கோ பகுதியில் கழிவுநீர் அகற்றும் நிலையம் அமைக்கப்பட்டு 5 பரிதிறன் கொண்ட 2 மோட்டார்கள் மற்றும் 7.5 பரி திறன் கொண்ட 1 மின்மோட்டாரை கொண்டு தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுநீரை இணையம் 1–ல் உள்ள பாதாள கழிவுநீர் நிலையத்திற்கு இறைக்கப்படுகிறது.

மறைமலைநகர் தொழிற்பேட்டை பகுதி (SPEL கம்பெனி அருகில்) கழிவுநீர் உந்து நிலையத்தில் 15 பரிதிறன் கொண்ட இரண்டு மின்மோட்டார்கள் மூலம் தொழிற்பேட்டை பகுதிகளிலிருந்து வருகின்ற கழிவுநீர் அனைத்தும் இணையம் 1–ல் உள்ள பிரதான கழிவுநீர் நிலையத்திற்கு இறைக்கப்படுகிறது.

இணையம் 3 மற்றும் 2 குடியிருப்பு பகுதிகள், தொழிற்சாலைப் பகுதியிலிருந்து வரப்பெற்ற கழிவுநீர் இணையம் 2–ல் அமைக்கப்பட்ட கழிவுநீர் உந்து நிலையத்தில் 35 பரி திறன் உள்ள ஒரு மோட்டார்,5 பரிதிறன் கொண்ட ஒரு மோட்டாரும், இணையம் 1–ல் உள்ள பிரதான கழிவுநீர் நிலையத்திற்கு கழிவுநீரை இறைக்கப்படுகிறது.

மேலும் கடந்த 2009–2010 –ம் ஆண்டு ரூ.375.00 லட்சம் மதிப்பீட்டில் பாதாள சாக்கடை அபிவிருத்தி திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டதில் புதிதாக 2.20 MLD கொள்ளளவு திறன்கொண்ட சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கூடுதல் திறன்கொண்ட சேகரிப்பு கிணறுகள் அமைக்கப்பட்டு 2011–ம் ஆண்டு முதல் செயல்பாட்டிலுள்ளது. மேலும் கடந்த 2018–2019–ம் ஆண்டு தொழிற்பேட்டை பகுதியிலுள்ள முறையற்ற அனைத்து கழிவுநீர் இணைப்புகளும் துண்டிக்கப்பட்டு தொழிற்பேட்டை கழிவுகள் சேகரிக்கப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது தற்போது பிரதான கழிவுநீருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள Oxidation Pond (குளம்) தூர்வாரி சுத்தம் செய்யப்பட்டு மழைநீர் சேகரிப்பு குளமாக தற்போது மாற்றம் செய்யப்பட்டு பயன்பாட்டிலுள்ளது.

<u>புதிய பாதாள சாக்கடை திட்டம்</u>

Swatchh Bharath Mission 2.0/KFWதிட்டத்தின் கீழ் புதிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க ரூ.300.51 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்படு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கையில் உள்ளது.

<u>சுடுகாடு– இடுகாடு</u>

மறைமலைநகர் பகுதியில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், இந்து, முஸ்லீம், கிறிஸ்துவர் என மத வாரியாக தனித்தனி சுடுகாடு மற்றும் இடுகாட்டிற்கு இடம் ஒதுக்கி, மதில்சுவர், எரிமேடை , தண்ணீர் வசதியுடன் அமைத்து நகராட்சிக்கு ஒப்படைத்து பராமரிப்புப் பணி நகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.

மேலும், பேரமனூர் மற்றும் கூடலூர் பகுதியில் நவீன எரிவாயு கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. காட்டங்குளத்தூர் பகுதியில் 150.00 இலட்சம் மதிப்பீட்டில் எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

<u>நவீன ஆட்டிறைச்சி கூடம்</u>

2008–09 –ஆம் நிதியாண்டில் மறைமலைநகர் நகராட்சிக்கு ரூ.20.00 லட்சத்தில் நவீன ஆட்டிறைச்சி கூடம் காமராஜர் சாலையில் கட்டப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

<u>நீர்நிலைகள்</u>

இந்நகராட்சி பகுதிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் அம்ருத் 2.0 திட்டதின் கீழ் 6 குளங்கள் மேம்பாட்டு பணிகள் ரூ.316.40 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் முடிவுற்று பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

<u>தூய்மை இந்தியா திட்டம்</u>

இத்திட்டத்தின் கீழ் 2 சமுதாய கழிப்பறைகள் 1 எண்ணிக்கை பொதுக்கழிப்பிடம் ரூ.86.20 இலட்சத்தில் பணிகள் முடிவடைந்து பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. மேலும் 2023–24ம் ஆண்டிற்கு 1 சமுதாய கழிப்பறை கட்டப்பட்டு வருகிறது.

<u>பூங்கா</u>

KNMT திட்டத்தின் கீழ் ரூ.49.90 இலட்சம் மதிப்பீட்டில் பூங்கா மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது,

Amrut 2.0 திட்டத்தின் கீழ் ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் 2 எண்ணிக்கை பூங்கா மேம்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

பேருந்து நிலையம்

மறைமலைநகர் நகராட்சிக்கு ரூ.80.00 லட்சத்தில் பேருந்து நிலையம் அமைக்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4168/09/எப்3 நாள்.13.12.2009–ன் மூலம் நிர்வாக அனுமதி பெற்று ரூ.73.46 இலட்சம் செலவில் பணி முடிக்கப்பட்டு 09.05.2013–ந் தேதி முதல் நடைமுறைக்கு வரப்பெற்றுள்ளது.

2022–23 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 1 எண்ணிக்கை பேருந்து நிலையம் ரூ.12.00 இலட்சம் செலவில் பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

நியாய விலை கடை

2022–23 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 3 எண்ணிக்கை நியாய விலை கடை ரூ.36.90 இலட்சம் செலவில் பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

நவீன அங்கன்வாடி மையம்

2022–23 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் 1 எண்ணிக்கை நவீன அங்கன்வாடி மையம் ரூ.23.00 இலட்சம் செலவில் பணி முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

தெருவிளக்கு

2021–22 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யம் திட்டத்தின் கீழ் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் 890 எண்ணம் தெருவிளக்குகள் பொருத்துதல் பணி நடைபெற்று வருகின்றன.

2022-23ஆம் ஆண்டு SUIDF திட்டத்தின் கீழ் ரூ.8.06 கோடி மதிப்பீட்டில் 5784 எண்ணிக்கை தெருவிளக்குகளை LED விளக்குகளாக மாற்றும் பணி நடைபெற்று வருகின்றன.

நகர்புற சுகாதார மையம்

2023–24ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யம் (தேசிய சுகாதார இயக்கம்) திட்டத்தின் கீழ் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்புற சுகாதார மையம் அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது.

முடிவு

நகராட்சி அபிவிருத்தி வேலைகள் மற்றும் மக்களின் அத்தியாவசியமான தேவைகளான சாலை வசதிகள், தெரு விளக்கு, குடிநீர் வசதி, சுகாதார வசதிகள் உடனுக்குடன் செய்து முடிக்கவும், அவ்வப்போது இந்நகராட்சிக்கு பல திட்டங்களை எடுத்து கூறி முடிக்க ஆலோசனை வழங்கிய மாவட்ட ஆட்சித் தலைவர் செங்கல்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு மண்டலம் அவர்கள் நகர மன்றத்தலைவர், நகரமன்ற துணைத்தலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பனிர் அவர்களுக்கும், அறிக்கை ஆண்டில் பணிகளை செவ்வனே செய்து முடிக்க உறுதுணையாக இருந்த அலுவலர்களுக்கும் அகம் மற்றும் புறமுக அலுவலக பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

26/6

ஆணையாளர்

மறைமலைநகர் நகராட்சி

26/6/2024